[1979 மார்ச் 10

ஆட்சிமொழி மாநாடு.

* வினா எண். 322— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 மார்ச்சு முதல் வாரத்தில் டில்லியில் நடந்த ஆட்சிமொழி மாநாட்டில் தமிழக அரசு சார்பில் யாரேனும் கலந்து கொண்டாரா?

(ஆ) ஆம் எனில், அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 3—3—1978 அன்று புதுடில்லியில் நடைபெற்ற ஆட்சிமொழி மாநாட்டில் தமிழக அரசு சார்பில் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், ஆய்வுத் தனி அலுவலரும் கலந்துகொண்டார்கள்.

(ஆ) ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையிலே இன்று நடைமுறையிலே இருக்கின்ற ஆங்கிலம் மற்றக் காரியங்களுக்கு உபயோகப்படுவதாக இருந்தாலும், அதை நீக்கிவிட்டு இந்தி வரவேண்டும் என்று (அ) பகுதியிலே இருக்கிறதே, அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே எங்கே இந்தி என்று அங்கே இருக்கிறது, நன்றாகப் பாருங்கள். இது மாநிலங்கள் மாநாடு. மாநில அரசின் மாநாடு அல்ல. மாநிலங்கள் மொழிகளைப் பற்றி ஆராய்கின்ற ஒரு மத்திய மாநாடு.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டுள்ள விடையில், மாநிலங்கள் அவரவர்கள் ஆட்சி மொழியிலே பணி நடத்துவதிலே அதுபற்றிய முன்னேற்றம் மன நிறைவளிப்பதாக இல்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, அதுபற்றி நம்முடைய மாநில அரசின் கருத்து என்ன? அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த அரசுக்கும் மன நிறைவு அளிக்கவில்லை. ஆகவே, நல்ல முறையிலே தமிழ் ஆட்சி மொழியாவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

@ 254-262 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 மார்ச் 10]

திரு. மு. ஜான் வின்சென்ட்: தலைவர் அவர்களே, பாராளு மன்றத்திலே உள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர்கள் தமிழிலேயே கேள்விகள் கேட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால், எப்போது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பாராளு மன்ற உறுப்பினர்கள் தமிழக அரசினுடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல.

திரு. வி.கே. கோதண்டராமன்: ஸார், இதுபற்றிய அறிக்கை புஸ்தகம்போல் இருக்கிறது. இவ்வளவையும் படித்துவிட்டப் பிறகு கேள்விகள் கேட்பதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். என்றாலும், இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அந்தந்த மாநில காரியங்களை அந்தந்த மாநிலங்களின் மொழியிலேயே உடனடியாக நடத்தப்பட வேண்டுமென்று. அப்படி இல்லாவிட்டால், அது பொருளற்றதாகி விடும். அதற்காக வேண்டி தட்டச்சர்கள், அதுபோல் இன்னும் பல தரப்புகளிலே ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று சொல்லக்கூடிய அதே நேரத்திலே, 63 ஆம் ஆண்டு மொழிச் சட்டத்தின்படி பிற மாநில சட்டங்களை, இந்தியிலே மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று உள்ளது. ஆகவே, நான் சொல்கிறேன், மத்திய அரசாங்கத்திலே உள்ளதை 15 தேசிய மொழிகளிலும் மொழிபெயர்த்து அனுப்பப்பட வேண்டும் என்று இந்த மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த மாநாடு அனைத்து இந்திய அளவிலே கூட்டப்பட்ட ஒரு மாநாடு ஆகும். மாநிலங்களில் அந்த மாநிலங்களின் மொழிகளிலே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்கிற முடிவிற்கு ஏற்ப, அந்த முறையை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் என்ற காரியங்களை ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். அந்த அனைத்திந்திய மாநாட்டிலே ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டத்தின்படி, மாநில சட்டங்களை அந்தந்த மாநிலங்களே இந்தியில் மொழிபெயர்க்க வேண்டுமென்று ஒரு முடிவெடுத்திருந்தார்கள். இந்த ஆட்சி மொழி மாநாட்டிலே, அதை மாநிலங்கள் செய்யாது, மத்திய அரசுதான் அதைச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். 15 தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக அமைய வேண்டுமென்பது எங்களுக்கும் உடன்பாடுதான்.

[முற்பகல் 9-30]

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தமிழ் ஆட்சிமொழியாக எல்லாத் துறைகளிலும் செயல்பட முயற்சிகளைச் செய்வதாகச் சொன்னதற்கு நன்றி. சில மாதங்களுக்கு முன்னால் இராமநாத புரம் மாவட்ட நீதிமன்றத்தில் தமிழில் தீர்ப்புச் சொன்னது செல்லாது என்று நம்முடைய உயர்நீதிமன்றம் அறிவித்த தமிழுக்கு அவமானமான நிகழ்ச்சியை மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: குற்ற இயல் நீதிமன்றங்களில் தமிழிலே நடத்த வேண்டுமென்று ஆணைக் குறிப்பு இருந்து அந்த முறையில் அவை நடைபெற்று வருகின்றன. ஆனால் உரிமை இயல் நீதிமன்றங்கள் (சிவில் கோர்ட்ஸ்) பொறுத்தவரை இன்னும் அந்த ஆணை பிறப்பிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் இதற்குத் தேவையான பல்வேறு சட்டங்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்படவில்லை. அந்த வேலை நடந்து வருகிறது. இந்தச சட்டங்கள் எல்லாம் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்ட பிறகு இங்கும் தமிழிலே நடைபெற வேண்டுமென்ற உத்தரவு போடுவோமானால் அந்த வழக்குகளில் தமிழில் தீர்ப்புகள் வழங்கப்படுகிறபோது அந்தத் தீர்ப்புகளை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும். இப்போது அந்த ஆணை இல்லாத காரணத்தால் உரிமை இயல் நீதிமன்றத்தில் தமிழில் சொல்லப்பட்ட தீர்ப்பு செல்லாது என்று உயர்நீதிமன்றம் அறிவித்திருக்கிறது.

திரு. க. அன்பழகன்: மத்திய அரசினுடைய அலுவலகங்களாக மாநிலத்திலே பல்வேறு அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் மக்கள் தங்கள் தாய்மொழியில் விண்ணப்பம் கொடுப்பார்களானால் தாய் மொழியிலேயே பதில் அளிக்க வேண்டுமென்ற கருத்து இடம் பெற்றிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மணியார்டர் பாரங்கள், ரயில்வே ரிசர்வேஷன் செய்வதற்கான பாரங்கள் எல்லாவற்றிலும் அந்தந்த மாநில மொழி இடம் பெறவேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துமா? மத்திய பொதுப் பணித் தேர்வுக்கு கேள்வித்தாள் வழங்கும்போது எல்லா மொழியிலும் விடை எழுதலாம் என்று தெரிவித்தாலும் கூட கேள்வித்தாள்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டும்தான் தரப்படுகிறது. இந்த அநீதிகளை மாற்றி எல்லா மொழிகளிலும் கேள்வித்தாள் வழங்கச்செய்ய இந்த அரசு தொடர்ந்து முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, முயற்சிக்கும்.